**நோவூட் பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நோவூட் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோவூட் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் தொடரப்பட்டுள்ள 03 வழக்குகள் தொடர்பாக நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் வழக்குகள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதாக | வழக்கு தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கழிவுப்பொருள் கூடை கணக்கில் 175,000 ஆன செலவு மீதி ஒன்று கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |
| (ஆ) பொகவந்தலாவ புதிய கடைத் தொகுதியின் மேல் மாடியில் 21 கடைகள் நிர்மாணிக்கப்பட்ட நீண்டகால குத்தகைக்காக கேள்வி கூறி கேள்வித் தொகையில் 25 சதவீதம் என 21 கேள்விதாரர்களிடமிருந்து 12,347,375 ஆண்டு ஒரே தடவைவில் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு கடைகள் நிர்மாணிப்பதற்குரிய எந்தவொரு | சுட்டிக்காட்டப்பட்டுள் ள தவறுகளை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதி கூற்றுகளில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை ஒன்றையும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளாமல் இப்பணத்தை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | | |
| (இ) | மீளாவாண்டிற்குரிய நிலையான வைப்புக்கள் வட்டி மற்றும் விளம்பர பதாதை கட்டணங்கள் ரூபா 351,019 ஆன சட்டத்தரணிகள் கட்டணம், சம்பளங்கள் மற்றும் பிரயாணச் செலவினங்களின் மொத்தம் ரூபா 319,443 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப் பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் போது வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 02. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,773,456 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,612,569 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொகவந்தலாவ புதிய கடைத் தொகுதியில் புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக கேள்விதாரர்கள் செய்யப்பட்டு உடன்படிக்கை செய்யாமல் யோகா 12,347,375 ஆன முற்பன தொகை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் திசம்பர் 31 ஆம் திகதி வரை இப்பணத்தை முதலீடு செய்து ரூபா 909,562 ஆன வட்டி வருமானம் ஒன்று உழைக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் இச்செயற்பாட்டுக்காக பெற்றுக் கொண்ட தொகையில் ரூபா 13,256,937 ஆன தொகையொன்று சபையிடம் குறைந்தது காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் உள்ளவாறு சபையின் நிதி நிலைமை ரூபா 11,114,745 தொகை மாத்திரமாக இருந்தது. கடைகள் நிர்மாணிப்பதற்குரிய எந்த ஒரு நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படாமல் புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக பெற்ற தொகையில் ரூபா 2,142,192 தொகை சபை நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டு இருந்தது. | இதற்காக பெற்றுக்கொண்ட தொகையில் ரூபா 10,000,000 ஐ நிலையான வைப்பாக வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய ரூபா 2,142,192 தொகை கௌரவ தலைவர் உட்பட நிதிக்குழுவின் அங்கீகாரத்துடன் வெவ்வேறு கொடுப்பவர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | சேகரிக்கப்பட பணத்தை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,320,000 | 3,102,133 | 3,237,884 | 289,800 | 3,490,000 | 3,394,218 | 3.309.425 | 425,551 |
| (ii) | வாடகை | 11,543,000 | 8,445,360 | 8,458,807 | 2,046,856 | 11,846,052 | 7,352,658 | 7,352,658 | 2,060,303 |
| (iii) | அனுமதிப்பத் திரககட்டணங்கள் | 3,961,000 | 1,997,048 | 1,997,048 | - | 2,587,000 | 2,019,556 | 2,045,096 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 69,036,460 | 10,014,386 | 8,449,170 | 8,241,136 | 71,281,780 | 6,372,674 | 28,738,339 | 6,675,920 |
| | | 89,860,460 | 23,558,927 | 22,142,909 | 10,577,792 | 89,204,832 | 19,139,106 | 41,445,518 | 9,161,774 |

### 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 305,776 ஆன நிலுவை வீதவரி மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதில் ஆண்டில் 56 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே நிலுவை வீதவரியில் ரூபா 3,095 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாக 2 தனியார் வீத வரி வளவுகளிலிருந்தும் ரூபா 21,790 தொகை 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த 6 வீதவரி வளவுகளில் உள்ளடக்கப்பட்டு காணப்பட்டன 35 வீதவரி அலகுகளில் 01 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் ஆன காலம் வரை நிலுவையாக இருந்த ரூபா 108,438 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டன | பதவியணியின் போதுமானதாக இல்லாமையால் குறித்த செயற்பாடுகள் தாமதிக்கப் பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | வாடகை<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடை அறை வாடகை ரூபா 1,976,546 அறவிடப்பட்டிருக்கிவல்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (இ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை க்கட்டணம்<br>மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 875,636 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 7,365,500 ஆக இருந்தது. . | நீதிமன்றத் தண்டப்பணம் 2023.05.19 ஆந் திகதி ரூபா 523,488 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 3,699,660 தொகையும் கிடைத்துள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக கலி வண்டியொன்று சபைக்குச் சொந்தமாக இல்லாமல் இருந்ததுடன் பிரதேசத்தில் மலக்கழிவுகளை அகற்றுவதற்கு வேலை திட்டம் ஒன்று காணப்படவில்லை | சபையின் நிதி நிலைமை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் கலிவண்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்கு முடியாமல் இருப்பதாக | சட்டத்தில் கையளிக்க விடயங்களை நிறைவேற்ற வேண்டும் |
| (ஆ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் வீதிகள் வர்த்தமானில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக | சட்டத்தில் கையளிக்க விடயங்களை நிறைவேற்ற வேண்டும் |
| (இ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிரதேச சபையால் சுத்திகரிக்கப்பட்டு மீட்டர் பொருத்தப்பட்ட முறையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மாதாந்தம் நிலையான கட்டணம் ஒன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொதுச் சேவைகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பகமுவ பிரதேச சபையினால் நோர்வூட் சபைக்கு இணைக்கப் பட்ட உத்தியோகத்தர்களின் கடன் தவணை ரூபா 639,031 தொகையை அம்புகமுவ பிரதேச சபைக்கு அனுப்பி வைக்காமல் 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது | இது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருவதாக | அறவிடப்பட்ட கடனை அனுப்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒஸ்போன் மேற்பகுதி நூலக கட்டிட திருத்தம் செய்யும் செயற் திட்டத்திற்காக ரூபா 2,435,864 இற்கு 2022 மார்ச் 15 ஆம் திகதி உடன்படிக்கை செய்து அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படாதிருக்கையில் 2022 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 487,000 முப்பணம் வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | இதற்காக உடன்படிக்கை செய்த சங்கத்துக்கு அறிவித்து உள்ளதுடன் செலுத்தப்பட்ட முற்பணத் தொகைக்குரிய வேலைகளை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிர்மாண நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 28 கொங்கிரீட் வீதிகளில் மாதிரிகளை | ரூபா 211,000 தொகையில் ரூபா 148,000 ஆன தொகை | பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சிப்பதற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவுக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகையில் மேலும் ரூபா 63,000 தொகை தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | ஒன்று தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 63,000 தேர்வு செய்ய வேண்டி உள்ளதாக | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 03 கட்டிடங்கள் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் முன் பள்ளி பாடசாலை ஒன்று, வைத்திய நிலையம் ஒன்று மற்றும் பொது நூலகம் ஒன்று என்பவற்றில் காணப்படும் 117 சொத்து உருப்படிகள் மற்றும் சேதன பசளை இருப்பின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டின் போது பொகவந்தலாவ புதிய வியாபாரக் கடைத்தொகுதியின் கடைகளுக்காக கேள்வி சமர்ப்பித்திருந்த ரூபா 150,000 தொகையை வைப்புச் செய்த மூன்று வைப்பாளர்களுக்கு கடைகள் கிடைக்காமல் இருந்த போதும் வைப்புத் தொகையை மீள செலுத்தப்படாமல் இருந்ததுடன் அதில் ஒரு கேள்விதாரருக்கு கேள்வி நடைமுறையின்றி பொகவந்தலாவில் அமைந்துள்ள கடையொன்று ரூபா 1,555,000 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | குறித்த தரப்பினர் நிதி குழுவிடம் கடையொன்றை நிர்மாணித்து தருமாறு கேட்கப்பட்டதால் அதை செயல்படுத்தியுள்ளதாக | திருப்பி செலுத்த வேண்டிய பணத்தை மீளக்கொடுப்பனவு செய்ய வேண்டும் |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரேடேல் வீதி அருகில் உள்ள சபைக்கு சொந்தமான காணியின் எல்லை தீர்வு செய்யப்படாத இருந்ததுடன் அதில் அத்துமீறி குடியிருக்கும் நபர் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை | அம்பகமுவ பிரதேச சபையால் எமக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் சபைக்கு முன் பள்ளி பாடசாலை ஒன்றே நடத்திச் செல்வதற்கு எண்ணியுள்ளதாக | அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும் |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 24 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்தடன் 22 காணிகளுக்காக அனுமதிப் பத்திரங்கள் அல்லது | சபையின் நிதி நிலைமையின் பிரகாரம் அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு காணியை | சபை சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கைகள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் படவில்லை அத்தகைய 11 காணிகளின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை | பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தூணில் உயரத்தை மாத்திரம் பெறுகை ஆவணத்துக்கு உள்ளடக்கி மதிப்பீடு செய்யப்பட்ட நியமத்திற்கு இணங்காத வகையில் 152 கொங்கரீட் தூண்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 376,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் தூண்கள் சந்தையில் இல்லாமையால் ஒப்பந்தத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டியிருந்ததால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக | மதிப்பிடப்பட்ட நியமத்திற்கு இணங்க வேலைகள் செய்யப்பட வேண்டும் |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பின்னிணைப்பு 02 படிவத்தை அடிப்படையாக கொண்டு மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | மனிதவள திட்டம் தொடர்பாக முழுமையான தெளிவு ஒன்று இல்லாமை காரணமாக இதுவரை திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 94 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 22 பதவிகளில் 73 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதன் காரணமாக வருமான சேகரிப்பு, சமூக சேவைகள், பொது சுகாதாரம், கழிவு முகாமைத்துவம் போன்ற சபையில் அடிப்படை செயற்பாடுகளை நிறைவேற்று வதில் தடைகள் காணப்பட்டன | தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமை காரணமாக புதிய ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள தால் அலுவலகத்தில் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதில் தடை ஒன்று உருவாகி உள்ளதாக | வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் புதிய சுய உழைப்பினை 01 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதன் பின்னர் அதன் செயன்முன்னேற்றம் 01 சதவீதம் முதல் 74 சதவீதத்திற்கு இடையே காணப்படுவதாக செயல் நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் புதிய சுய உழைப்பு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய உறுப்புரை ஒன்றை நிறைவேற்றா மையால் செயற்படுத்த முடியாமல் இருந்ததாக | திட்டங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாளான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 6 வருமான விடயங்களில் 26 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும் 09 செலவின விடயங்களில் 0 சதவீதம் முதல் 122 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் மதிப்பீட்டின் பிரகாரம் முடியுமான வரை நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு ஆபத்து பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.3 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கழிவுகள் முகாமைத்துவத்திற்காக கிலானி பிரதேசத்தில் 35 பேர்ச் பரப்பளவிலான காணி பிரதேசமான்று ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் இன்றி காணி நிரப்பல்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆண்டில் 700 கிலோ கிராம் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதும் விற்பனைக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நோவுட் பிரதேச சபை மீண்டும் கூட்டிணைப்பட்ட சபையாக இருப்பதாலும் நிதி மட்டத்தில் மிக குறைந்த மட்டத்தில் உள்ள சபையொன்றாக இருப்பதால் உபகரணங்களைக் கொள்வனவு செய்யப்படவில்லையென | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு ஆபத்து பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் நிலைபெறான அபிவிருத்தி நோக்கங்கள் 06 இன் ஊடாக 22 இலக்குகள் தாபிக்கப்பட்டிருந்தன சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வடிகாண்களையும் நூறு சதவீதம் நிர்மாணித்தல், நுளம்புகள் பெருகும் அனைத்து இடங்களையும் ஒழித்தல் குடிநீர் மாதிரிகளை தொடர்ந்து பரீட்சித்தல், நீர் மூலாதாரங்களை பாதுகாத்தல், இயலுமானவரை சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை பயன்படுத்துதல் போன்ற இலக்குகள் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை அத்துடன் புதிய உப உறுப்புரைகளை விதித்தல், உப உறுப்புரைகளை திருத்தம் செய்தல், புதிய உப உறுப்புரைகளைப் பிறப்பித்தல், உறுப்புரைகளை திருத்தம் செய்தல் மதிப்பீடு செய்தல் போன்ற இலக்குகளும் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை ஏனைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் நியதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |